**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 348/ந/2025, நாள் 12.02.2026

P. விஸ்வநாத்,
குன்றத்தூர், சென்னை. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
குன்றத்தூர் நகராட்சி,
குன்றத்தூர். – எதிர்மனுதாரர்

சென்னை, குன்றத்தூர், வார்டு 30, குமரன் நகர், எண்.474 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.P.விஸ்வநாத், த/பெ. திரு. பார்த்தசாரதி என்பவரின் 19.09.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.09.2025 அன்று பெறப்பட்டு, 348/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, குன்றத்தூர், வார்டு 30, குமரன் நகர், எண்.474 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.P.விஸ்வநாத் த/பெ. திரு.பார்த்தசாரதி என்பவரின் 19.09.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"நான் நெ.474, வார்டு எண்.30, குமரன் நகர், குன்றத்தூர் என்ற விலாசத்தில் தரைதளத்தில் ஒரு சிறிய லேத் பட்டரை 1500 சதுர அடி நடத்தி வருகிறேன். முதல் தளத்தில் 1500 சதுர அடி சொந்த குடியிருப்பாக பயன்படுத்தி வருகிறேன்.

இந்நிலையில் வரிவிதிப்பு செய்யும்போது தவறுதலாக 3000 சதுர அடி மொத்தமாக Industrial என கணக்கிட்டு வரிவிதிப்பு எண் 900317 அரையாண்டிற்கு ரூ.11901/– என கணக்கிட்டு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. மேலும் இதுபோக முதல் தளத்திற்கு தனியே 1500 சதுர அடி என கணக்கிட்டு முறையே எண்.900410 மீண்டும் Industrial என கணக்கிட்டு ரூ.5950/– வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து அலுவலகத்தில் நேரடியாக சென்று முறையிட்டதில் தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த வரி விதிப்பு எண் 900317 வரி தொகை ரூ.11901/–ஐ ரத்து செய்து விடுகிறேன் என்று கூறி விட்டு புதியதாக வரிவிதிப்பு எண் 901114 வரித்தொகை ரூ.6734/– Residential என நிர்ணயம் செய்யப்பட்டது.

இந்நிலையில் குன்றத்தூர் நகராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.2102/2025/அ1, நாள் 16.07.2025 ன் மூலமாக தவறுதலாக கணக்கிடப்பட்ட 3000 சதுர அடி Industrial பயன்பாட்டில் உள்ள வரி விதிப்பு எண் 900317 ரத்து செய்யப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது குன்றத்தூர் நகராட்சியிலிருந்து தொலைபேசியில் மேற்படி வரிவிதிப்பு எண் 900317 ரத்து செய்யப்பட்டதாக தெரிவித்த வரியை மீண்டும் செலுத்தக்கோரி உள்ளனர். என்னால் இல்லாத ஒரு வரிவிதிப்பிற்கு தொகை செலுத்த இயலாது. ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள இரண்டு வரி விதிப்புகளுக்கு முறையாக செலுத்தி வருகிறேன்.

எனவே எனக்கு நியாயம் கிடைக்கும் வகையில் எனது மனுவை கனிவுடன் பரிசீலனை செய்து குன்றத்தூர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு தவறுதலாக போடப்பட்ட நகராட்சி ஆணையரே ரத்து செய்யப்பட்டதாக தெரிவித்துள்ள வரிவிதிப்பை கேட்பிலிருந்து நீக்கம் செய்து தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 17.10.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் குன்றத்தூர் நகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3) குன்றத்தூர் நகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண். 3991/2025/அ1, நாள் 22.12.2025–ன் நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பித்துள்ளார்:–

"குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண்.474, குமரன் நகர் என்ற முகவரியில் உள்ள திரு.P.விஸ்வநாத் அவர்களின் 1500 சதுர அடியில் உள்ள காலிமனையில் தரைதளம் தொழிற்சாலை பயன்பாடாகவும், முதல் தளம் 1500 சதுர அடியில் குடியிருப்பாகவும் கட்டிடம் கட்டப்பட்டுள்ள நிலையில் தொழிற்சாலை கட்டிடத்தின் வரிவிதிப்பு எண்.179/030/900317க்கு அரையாண்டு வரித்தொகை ரூ.11901/– முதல் தள கட்டிடம் சொந்த குடியிருப்பு பயன்பாடு கட்டிடத்திற்கு வரிவிதிப்பு எண்.179/030/901114–க்கு அரையாண்டு வரித்தொகை ரூ.3177/– ஆகவும் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், தொழிற்சாலை பயன்பாட்டில் உள்ள கட்டிட அளவு 3000 சதுர அடியாக அளவீடாக தவறுதலாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அவற்றினை மனுதாரர் தவறுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ள வரிவிதிப்பு எண்.179/030/900317–ஐ நீக்கம் செய்து திருத்திய வரிவிதிப்பு செய்து தருமாறு கோரியதின் அடிப்படையில் அவ்வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்து புதியதாக தொழிற்சாலை பயன்பாடு கட்டிடம் 1500 சதுர அடிக்கு (வரிவிதிப்பு எண்.179/030/900410) அரையாண்டு வரித்தொகை ரூ.5950/– நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு மனுதாரர் சொத்துவரி செலுத்தி வரும் நிலையில் நீக்கம் செய்யப்பட்ட வரிவிதிப்பானது 179/030/900317 தற்போது வரை நீக்கம் செய்யப்படாமல் உள்ளதின் அடிப்படையில் மீண்டும் கேட்பாக உள்ளதை அவற்றினை நீக்கம் செய்து தருமாறு மனுதாரரது கோரிக்கையாகும்.

அதன் அடிப்படையில் குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.972 நாள் 02.12.2025–ல் நீக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில் அவ்வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்து நிலுவை தொகையுடன் வஜா செய்யப்பட்டுள்ளது.

எனவே, பின்வரும் காலங்களில் இவ்வரிவிதிப்பானது தொடர்ச்சியாக கேட்பு எழுப்பப்படாது என்பதை இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான குன்றத்தூர் நகராட்சி ஆணையரை 29.12.2025 அன்று நடைபெறும் விசாரணையில் ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவ 11.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 29.12.2025 அன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை.

6) எதிர்மனுதாரரான குன்றத்தூர் நகராட்சி ஆணையர், தனது 26.12.2025 நாளிட்ட கடிதத்தில் 29.12.2025 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் குன்றத்தூர் நகராட்சி ஆணையர் கலந்து கொள்ள வேண்டி உள்ளதால் இந்நகராட்சியின் வருவாய் ஆய்வாளர் திரு.வெ.கருப்புசாமி அவர்கள் மேற்படி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் ஆஜராவார் என தெரிவித்ததன் அடிப்படையில் திரு.வெ.கருப்புசாமி, வருவாய் ஆய்வாளர் 29.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

“மனுதாரரின் கோரிக்கை குறித்து 16.07.2025 அன்று என்னால் கள ஆய்வு செய்யப்பட்டதில், மனுதாரரின் சொத்தில் தரைதளம் 1500 சதுர அடி தொழிற்சாலையும், முதல் தளம் 1500 சதுர அடி குடியிருப்பும் இருப்பது கண்டறியப்பட்டது. 3000 சதுர அடி தொழிற்சாலை என சொத்துவரி தவறுதலாக நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டது. எனவே மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று, குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.972 நாள் 02.12.2025–ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மனுதாரருக்கு விதிக்கப்பட்ட வரிவிதிப்பு எண். 179/030/900317 நீக்கம் செய்யப்பட்டு, தொழிற்சாலை பயன்பாடு கட்டிடம் 1500 சதுர அடிக்கு (வரி விதிப்பு எண்.179/030/900410) அரையாண்டு வரித்தொகை ரூ.5950/– நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்ற விவரம் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்னிலையில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

7) இந்நிலையில் மனுதாரர் தனது 29.12.2025 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் தனது உறவினர் காலமாகிவிட்டதால் 29.12.2025 அன்றைய விசாரணையில் கலந்து கொள்ள இயலவில்லை என தெரிவித்து தனக்கு விசாரணைக்கு மறு தேதி வழங்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு மேற்படி விசாரணை 30.01.2026 அன்று நடைபெறும் என தெரிவித்து மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு அழைப்பாணைகள் 20.01.2026 அன்று அனுப்பப்பட்டது.

8) மனுதாரர் 30.01.2026 அன்றைய விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

“எனக்கு வரிவிதிப்பு எண்.900317ஐ நீக்கம் செய்யப்பட்டு புதியதாக தொழிற்சாலை பயன்பாட்டு கட்டிடம் 1500 சதுர அடி குடியிருப்புக்கான வரிவிதிப்பு எண்.179/030/900410 அரையாண்டு வரித்தொகை நகர்மன்ற தீர்மானத்தில் நீக்கம் செய்ய அனுமதி வழங்கியதனடிப்படையில் அவ்வரிவிதிப்பு நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ.24,254/– (ரூபாய் இருபத்தி நான்காயிரத்து இருநூற்றி ஐம்பத்தி நான்கு மட்டும்) வரித்தொகை நீக்கம் செய்யப்பட்டதற்கான ஆவண நகல் இன்றைய விசாரணையின் முடிவில் பெற்றுக்கொண்டேன் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

9) எதிர்மனுதாரரான குன்றத்தூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.3991/2025/அ1, நாள் 29.01.2026–ல் 30.01.2026 அன்று காஞ்சிபுரம் மாவட்ட

ஆட்சித்தலைவர் அவர்களின் தேர்தல் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் குன்றத்தூர் நகராட்சி ஆணையர் கலந்து கொள்ள வேண்டி உள்ளதால், இந்நகராட்சியின் வருவாய் உதவியாளர் திரு.நா.ஆனந்த் அவர்கள் மேற்படி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் ஆஜராவார் என தெரிவித்ததன் அடிப்படையில் திரு.நா.ஆனந்த், வருவாய் உதவியாளர் 30.01.2026 அன்றைய விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரருக்கு விதிக்கப்பட்டிருந்த வரிவிதிப்பு எண். 179/030/900317 நகர்மன்ற தீர்மானத்தின்படி நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் 2023–24ம் ஆண்டுக்கான செலுத்திய வரித்தொகை ரூ.24,254/– (ரூபாய் இருபத்தி நான்காயிரத்து இருநூற்றி ஐம்பத்தி நான்கு மட்டும்) முழுவதுமாக அவருக்கு திரும்ப வழங்குவதற்கான ஆணையின் நகல் இன்றைய விசாரணையின் முடிவில் மனுதாரருக்கு வழங்கப்பட்டது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் முன்பு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்''. என தெரிவித்துள்ளார்.

10) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான குன்றத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, குன்றத்தூர் நகராட்சி வருவாய் ஆய்வாளர், நகராட்சி வருவாய் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

குன்றத்தூர் நகராட்சி, வார்டு எண்.30, குமரன் நகர் எண்.474 என்ற விலாசத்தில் தரைதளத்தில் ஒரு சிறிய லேத் பட்டரை 1500 சதுர அடி, முதல் தளத்தில் 1500 சதுர அடி சொந்த த குடியிருப்பாக தான் பயன்படுத்தி வருவதாகவும், வரிவிதிப்பு செய்யும் போது தவறுதலாக 3000 சதுர அடி மொத்தமாக Industrial என கணக்கிட்டு வரிவிதிப்பு எண்.900317 அரையாண்டிற்கு ரூ.11901/– என கணக்கிட்டு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது எனவும், முதல் தளத்திற்கு தனியே 1500 சதுர அடி என கணக்கிட்டு முறையே வரிவிதிப்பு எண்.900410 மீண்டும் Industrial என கணக்கிட்டு ரூ.5950/– வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது எனவும், இது குறித்து அலுவலகத்தில் நேரடியாக சென்று முறையிட்டதில் தவறுதலாக கணக்கிட்டு செய்யப்பட்டிருந்த வரி விதிப்பு எண்.900317 வரித்தொகை ரூ.11901/–ஐ ரத்து செய்து விடுவதாக கூறிவிட்டு புதியதாக வரிவிதிப்பு எண்.901114 வரித்தொகை ரூ.6734/– Residential என நிர்ணயம் செய்யப்பட்டது எனவும், குன்றத்தூர் நகராட்சி ஆணையர் கடிதம் ந.க.2102/2025/அ1, நாள் 16.07.2025–ல் தவறுதலாக கணக்கிடப்பட்ட 3000 சதுர அடி Indusitrial பயன்பாட்டில் உள்ள வரிவிதிப்பு எண் 900317 ரத்து செய்யப்பட்டது என தெரிவிக்கப்பட்டது எனவும், தற்போது குன்றத்தூர் நகராட்சியிலிருந்து தொலைபேசியில் மேற்படி வரிவிதிப்பு எண் 900317 ரத்து செய்யப்பட்டதாக தெரிவித்த வரியை மீண்டும் செலுத்தக்கோரி உள்ளனர் எனவும் தெரிவித்து, இல்லாத ஒரு வரி விதிப்பிற்கு தொகை செலுத்த இயலாது எனவும், தன்னால் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள இரண்டு வரிவிதிப்புகளுக்கு முறையாக செலுத்தி வருவதாகவும், தவறுதலாக போடப்பட்ட வரிவிதிப்பை நகராட்சி ஆணையரே ரத்து செய்யப்பட்டதாக தெரிவித்துள்ள வரிவிதிப்பை கேட்பிலிருந்து நீக்கம் செய்து தர ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று தவறுதலாக அளவீடு செய்யப்பட்ட வரி விதிப்பு எண்.179/030/900317–ஐ நீக்கம் செய்து, மேற்படி சொத்துவரிக்கான நிலுவைத்தொகையுடன் வஜா செய்யப்பட்டுள்ளது எனவும், புதியதாக தொழிற்சாலை பயன்பாடு கட்டிடத்திற்கான வரிவிதிப்பு எண்.179/030/900410–ல் அரையாண்டு வரித்தொகை ரூ.5950/– நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது எனவும், ரத்து செய்யப்பட்ட வரிவிதிப்புக்கான கேட்பு மீண்டும் எழுப்பப்படாது எனவும் குன்றத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி வருவாய்

ஆய்வாளர் மற்றும் நகராட்சி வருவாய் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலங்களிலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று மனுதாரருக்கு விதிக்கப்பட்டிருந்த வரிவிதிப்பு எண்.179/030/900317 ரத்து செய்யப்பட்டது என்றும், ரத்து செய்யப்பட்ட வரிவிதிப்புக்கான கேட்பு மீண்டும் எழுப்பப்படாது எனவும் குன்றத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி வருவாய் ஆய்வாளர் மற்றும் நகராட்சி வருவாய் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலங்களில் தெரிவித்திருப்பதை ஏற்று புகார்மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 12–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.P.விஸ்வநாத்,
   நெ.474, குமரன் நகர், வார்டு எண்.30,
   குன்றத்தூர்,
   சென்னை – 600 069.
2. நகராட்சி ஆணையர்,
   குன்றத்தூர் நகராட்சி,
   குன்றத்தூர்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,எம்.ஆர்.சி.நகர்,
   சென்னை – 600 028.
4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

16/2/26
செயலாளர்.